## கரூர் கொடும் துயர வழக்கு சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் போது – முதல்வர் விஜய் கரூர் செல்வதை கவனத்தில் கொள்வீர்!

# சாட்சியங்களை அச்சுறுத்தும் வகையில் பேசிய ஆதவ் அர்ஜுனா மீது வழக்குப் பதிவு செய்க!



### விசாரணை கண்காணிப்புக்குழு – சி.பி.ஐ.க்கு – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மனு!

**சென்னை, ஜூலை 9 -**

**கரூர் கொடும்துயர வழக்கு சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் போது முதலமைச்சர் விஜய் கரூர் செல்லவிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் - சாட்சியங்களை அச்சுறுத்தும் வகையில் பேசிய ஆதவ் அர்ஜுனா மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றும் - கரூர் சம்பவ விசாரணை கண்காணிப்புக்குழு மற்றும் சி.பி.ஐ.க்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனு அளித்துள்ளார்.**

அதன் விவரம் வருமாறு : -

கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையைத் தொடர்ந்து, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்கும் ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான மேற்பார்வைக் குழுவிடம் மனு ஒன்றை அளித்துள்ளார். அதில், கரூர் கொடும்துயரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளையும் நியமன ஆணைகளையும் வழங்க முதலமைச்சர் வரும் 10-ந் தேதி கரூர் செல்ல இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார். முதலமைச்சரின் இந்த பயணத்தை கண்காணிக்க வேண்டும் என்றும், கரூர் வழக்கில் சாட்சியங்களின் தற்போதைய நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி சி.பி.ஐ. விசாரணைக்குழுவிற்கு உத்தரவிட வேண்டும் என்றும் கண்காணிப்பு குழுவை ஆர்.எஸ்.பாரதி கேட்டுக் கொண்டுள்ளார். இதேபோல், ஆதவ் அர்ஜுனா கடந்த 2ம் தேதி பேசியது, கரூர் வழக்கில் அப்போதைய முதலமைச்சருக்கும், காவல்துறைக்கு எதிரான கதையை கட்டமைப்பதாக இருந்தது என்று கூறியுள்ளார்.

சாட்சிகள் மீது செல்வாக்கு செலுத்துதல், தடுத்தல் மற்றும் தலையீடு செய்தல் ஆகிய செயல்களுக்காக ஆதவ் அர்ஜுனா மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்க சி.பி.ஐ.க்கு உத்தரவிட வேண்டும் என்றும் நீதியரசர் அஜய் ரஸ்தோகியை ஆர்எஸ்பாரதி கேட்டுக்கொண்டுள்ளார்.

சி.பி.ஐ.க்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்துள்ள மனுவில், கரூர் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, இவ்வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தும் வகையிலும் சி.பி.ஐ. விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்திலும் கடந்த 2ம் தேதி பேசி இருப்பதை குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஆதவ் அர்ஜுனா மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சி.பி.ஐ. வசம் அளித்துள்ள புகார் மனுவில் வலியுறுத்தியுள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் உடல்நலம்குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகிறார். தகவல் அறிந்த முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு .நாசர் நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், ஜி.நாராயண பிரசாத், வழக்கறிஞர் பெ.வினோத் உள்ளனர்.

### பாளை தொகுதியில் பாதாளச் சாக்கடை

## பணிகள் முடிவடைந்த பகுதிகளில் சாலையை சீரமைக்க வேண்டும்!

### மாநகராட்சி ஆணையரிடம் மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. கோரிக்கை மனு!

நெல்லை, ஜூலை 9-

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவு பெற்று குண்டும் குழியுமாக உள்ளது.இதனால் பொது மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். போன்றவை உட்பட 3 கோரிக்கை களை வலியுறுத்தி நெல்லை மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணாவிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கை மனுக்கள் ஒவ்வொன்றின் விவரம் வருமாறு.

1. பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்று குண்டும், குழியுமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர்.

எனவே பொதுமக்கள் நலன் கருதி பாதாள சாக்கடை பணிகள் நிறைவடைந்த சாலைகளை சீரமைத்து புதிய சாலைகளாக மாற்றும் பணிகளை தொடங்கி விரைவாக முடித்திட கேட்டுக் கொள்கிறேன்.

2. பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பல சாலைகளுக்கு UNICODE இல்லை. UNICODE இல்லாத சாலைப் பணிகளை தொடங்க முடியவில்லை. எனவே UNICODE இல்லாத சாலைகளுக்கு உடனடியாக UNICODE பெறுவதற்கு தீர்மானம் நிறைவேற்றி சாலை அமைக்கும் பணிகளை தொடங்கி விரைவாக சாலைகள் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

3. பாளையங்கோட்டையில் மீன்,கோழி, ஆடு போன்ற விலங்கின இறைச்சி கடைகள் வெவ்வேறு இடங்களில் செயல்படுகிறது.இதனால் மக்கள் இறைச்சி அங்காடிகளுக்கு ஒவ்வொரு இடமாக சென்று இறைச்சி வாங்க வேண்டியது.

எனவே பொதுமக்கள் நலன் கருதி பாளையங்கோட்டையில் தற்காலிக மார்க்கெட் செயல் பட்டு வந்த காவலர் குடி யிருப்பு இருந்த இடத்தில் திருநெல்வேலி மாநகராட்சி சார்பில் ஆடு அறுப்புமனை மற்றும் ஆடு,மீன்,கோழி இறைச்சி விற்பனை அங்காடிகள் வளாகம் அமைத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

## தனியார் பேருந்தில் ரூ.10 வரை கூடுதல் கட்டணம்!

### நடத்துனருடன் பயணிகள் வாக்குவாதம்!

நாமக்கல், ஜூலை 9-

நாமக்கல்-திருச்செங்கோடு-ஈரோடு வழித்தடத்தில் இயங்கும் ஹர்சித்தா தனியார் பேருந்தில், ஈரோடு செல்லும் பயணிகளிடம் வழக்கமாக வசூலிக்கப்பட்ட ரூ.35-36 கட்டணத்திற்கு பதிலாக ரூ.45 வசூலிக்கப்பட்டதாகக் கூறி பயணிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

இதற்கிடையில், பள்ளிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் நிற்காமல் மேம்பாலம் வழியாக நேரடியாக ஈரோடு செல்லும் என நடத்துனர் தெரிவித்ததால், பள்ளிபாளையம் செல்ல வேண்டிய பயணிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து நடத்துனருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மற்ற பயணிகளும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பேருந்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் பேருந்து பள்ளிபாளையம் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், போலீசார் இரு தரப்பினரையும் சமரசம் செய்து அனுப்பி வைத்தனர்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்புவரை வழக்கமான கட்டணமே வசூலிக்கப்பட்ட நிலையில், தற்போது திடீரென ரூ.8 முதல் ரூ.10 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக பயணிகள் ஆதங்கத்துடன் புகார் தெரிவித்தனர்.

### தென்காசி மாவட்டம்

## குற்றாலநாதர் கோவிலில் சிறப்பு தரிசனத்திற்கு கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்க!

### தென்காசி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.வலியுறுத்தல்!

தென்காசி, ஜூலை 9-

தென்காசி மாவட்டம் குற்றாலம் திருக்குற்றால நாதர் சுவாமி கோவிலில் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக திருக்குற்றாலநாதசுவாமி, குழல்வாய் மொழி அம்மன் மற்றும் பராசக்தி அம்மன் என ஒவ்வொரு சன்னதியிலும் சிறப்பு தரிசனம் செய்வதற்காக நபர் ஒருவருக்கு ரூபாய் 50 கட்டணம் வசூல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.இது தொடர்பாக ஆட்சேபனை கோரும் அறிவிப்பு வெளிவந்த நிலையில் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் மத்தியில் கடும் அதிருப்தி உருவானதால் சிறப்பு தரிசனம் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும்.என தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் வலியுறுத்தி யுள்ளார்.

குற்றாலநாதர் கோவிலில் சிறப்பு தரிசன கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவனிடம் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கோரிக்கை வைத்தனர்.கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் உடனடியாக திருக்குற்றால நாதர் கோவில் உதவி ஆணையர் ஆறுமுகத்தை நேரில் சந்தித்து பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது மக்கள் மற்றும் பக்தர்கள் நலன் கருதி கட்டணம் வசூலிக்க கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவை கொடுத்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட உதவி ஆணையர் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக உத்தரவாதம் அளித்ததாக கலை கதிரவன் எம்.எல்.ஏ.தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குற்றாலம் பேரூர் செயலாளர் குட்டி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர். கிருஷ்ணராஜா, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ஸ்ரீதர், வீரபாண்டியன், பேரூர் துணை செயலாளர் மாரியப்பன், தகவல் தொழில்நுட்ப அணி ஜிம். ஜெய்சங்கர்,8 வது வார்டு செயலாளரும் ஒன்றிய பிரதிநிதியுமான குத்தா லிங்கம்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மா.முத்துக் குமார் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் – கோவை தேசிய நெடுஞ்சாலையில் கோமங்கலம்புதூர் அருகில் புதியதாக அமைக்கப்பட்ட சுங்கச்சாவடியில் விதிக்கப்பட்டிருந்த கட்டணங்கள் பொதுமக்களை பாதிக்கும் வகையில் இருந்த காரணத்தினால் அனைத்து பொதுமக்களும் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து கோரிக்கை வைத்ததை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, உடுமலை சட்டமன்ற உறுப்பினர் மு.ஜெயக்குமார் ஆகியோர் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சுங்கச்சாவடி கட்டணங்களை குறைத்து நிர்ணயம் செய்த பின்பு இந்த சுங்கச்சாவடி திறக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

## தமிழ்நாட்டில் ஒரு வாரத்திற்கு வெப்பநிலை அதிகரிக்கும்!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூலை 9-

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வெப்பம் அதிகரித்து வருகிறது. கோடை காலத்தில் வெயில் தாக்குவது போல ஜூலை மாதத்திலும் கொளுத்த...

தென்மேற்கு பருவமழை தமிழகத்தில் பரவலாக பெய்யவில்லை. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மட்டுமே மழை பெய்து வருகிறது....

இந்த நிலையில் தமிழகத்தில் மேலும் ஒரு வாரத்திற்கு வெப்பநிலை அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மைய மண்டல ... இயக்குனர் துரை தெரிவித்து உள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:...

மிழகத்தில் தென்மேற்கு பருவமழை மோசமாக உள்ளது. மும்பை, குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால் தமிழகத்தில் மேகங்கள் குறைவாக காணப்படுகின்றன.

இந்த வானிலை சூழ்நிலை காரணமாக இன்று முதல் மேலும் ஒரு வாரத்திற்கு தமிழகத்தில் வெப்ப நிலை அதிகரிக்கும். வெப்பம் அதிகரிப்பதற்கு எல் நினோ ஒரு காரணமாகும்....

தமிழகத்தில் அதிகபட்சமாக 39 செல்சியஸ் டிகிரி வரை தற்போது வெயில் பதிவாகி வருகிறது. நேற்று முன்தினம் தொண்டியில் அதிக பட்சமாக 39. டிகிரி வெயில் பதிவானது.

சென்னை உள்பட பெரும் பாலான மாவட்டங்களில் வெயில் இயல்பை விட அதிகமாகவே இருக்கக்கூடும். ஒரு வாரத்திற்கு ஒரு சில இடங்களில் மிதமான மழையே பெய்யக்கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.



கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரால் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டு வெற்றி பெற்ற நிலையில் தொகுதி முழுவதும் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் அதிரான்விடுதி, வெள்ளாளவிடுதி, கருப்பட்டிப்பட்டி, வளங்கொண்டான்விடுதி ஆகிய ஊராட்சிப் பகுதியில் வாக்காளப் பெருமக்களை இல்லம் தோறும் சந்தித்து நன்றி தெரிவித்தார் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா. இந்நிகழ்வில் கறம்பக்குடி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தவ. பாஞ்சாலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்டிமேடு அ. பக்கீர் முகமது

**ஜூலை 9 (2011)**



**இளமைப் பருவம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியில் பல கிளைக் கழகங்களை உருவாக்கி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல பொறுப்புகளை வகித்தவர்.**

**1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடன் சிறைக்குச் சென்றவர். தொடர்ந்து மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**